செ.வெ.எண்: 23 நாள்:17.06.2020

கரூர் மாவட்டம்

**தமிழக இளைஞர்கள் தனியார் துறையில் உள்ள வேலைவாய்ப்புகளை அறிந்து, விண்ணப்பித்து பயன்பெறும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ள "தமிழ்நாடு தனியார்துறை வேலை இணையத்தினை" வேலைநாடும் இளைஞர்கள் மற்றும் வேலையளிக்கும் நிறுவனங்கள் முறையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தகவல்**

அதன் விபரம் வருமாறு:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16.6.2020 அன்று தலைமைச் செயலகத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் சார்பில், தமிழ்நாட்டில் வேலை நாடும் இளைஞர்களையும், வேலை அளிக்கும் தனியார்துறை நிறுவனங்களையும் இணையதளம் வழியாக இணைத்து, வேலைவாய்ப்புகளை பெற்றுத் தரும் நோக்கில், பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட "தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையத்தினை" ('Tamil Nadu Private Job portal') துவக்கி வைத்துள்ளார்கள்.

www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலம் தனியார் துறையில் பணியாற்ற விரும்பும் இளைஞர்கள் நேரடியாக தங்களைக்குறித்த தகவல்களை அளித்து முதலில் பதிவு செய்துகொள்ள வேண்டும். பிறகு தங்களின் கல்வித்தகுதி, முன்அனுபவம் ஆகியவற்றிற்கு ஏற்ற பணிவாய்ப்புகளை பெறாலாம். அதேபோல, தனியார் துறை சார்ந்த அனைத்து சிறு, குறு, நடுத்தர மற்றும் பெரு நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்தின் காலிப்பணியிடங்களை இவ்விணையதளத்தில் பதிவேற்றம் செய்திடவும், அக்காலிப் பணியிடங்களுக்கு தகுதியான நபர்களை தேர்வு செய்து பணி நியமனம் செய்வதற்கும் உதவிடும் வகையில் "தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம்" உருவாக்கப்பட்டுள்ளது.

வேலை அளிப்போர் மற்றும் வேலை நாடுநர்களுக்கு இச்சேவைகள், கட்டணமின்றி தமிழ்நாடு அரசால் வழங்கப்படும். ஏற்கனவே கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மூலம் சிறிய மற்றும் பெரிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போதைய சூழ்நிலையில் இதற்கு மாற்றாக "தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம்" மூலம் இணையவழி நேர்காணல் மற்றும் இணையவழி பணி நியமனம் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

அதிக எண்ணிக்கையில் தமிழ்நாட்டிலுள்ள வேலைநாடும் இளைஞர்களை, இணைய வழியாக தொடர்பு கொண்டு, தனியார் துறை வேலையளிப்போர்கள் பணி வாய்ப்புகளை அளிப்பதற்கு இந்த இணைய சேவை பெரிதும் உதவியாக இருக்கும். எனவே, தமிழக அரசின் இந்த சிறப்பான சேவையினை வேலைநாடும் இளைஞர்கள் மற்றும் வேலையளிக்கும் நிறுவனங்கள் முறையாகப்ப பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**